இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களிற்கான பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

மட்டம் - 05

**LLU5709-** நிர்வாகச்சட்டம்

தொடர்மதிப்பீட்டுப் பரீட்சை **II** – 2022/2023

காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 01.12.2023 நேரம்: பி.ப. 01.30 – பி.ப 02.30

**வினாக்களின் எண்ணிக்கை - இரண்டு (02)**
**ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.**
**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. ருசிதானியாவின் நிலைபேண்தகு சக்திக்கான அதிகாரசபை (ரு.நி.ச.அ) ஆனது 45ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டின் ருசிதானியா நிலைபேண்தகு சக்திக்கான அதிகாரசபைச் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்ட உறுப்பு ஆகும். ரு.நி.ச.அ ஆனது புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி திட்டங்களிற்கான உரிமம் வழங்குதல் உள்ளிட்ட சில அதிகாரங்களை கொண்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 15 ஆனது, ரு.நி.ச.அ இன் பணிப்பாளர் நாயகத்திற்கு இதே சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள ஆலோசனைக்கான ஆணைக்குழுவின் பரிந்துரையின் மீது குறித்துரைக்கப்பட்ட திட்டங்களிற்கு உரிமங்களை வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கிறது.

கே.பி. சோலார் பவர் (பிரைவட்) லிமிட்டட் ஆனது புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம் ஒன்றை மேற்கொள்ள உரிமம் ஒன்றைப் பெறுவதற்கு ரு.நி.ச.அ இற்கு ஒரு விண்ணபத்தை முன்வைத்தது. எவ்வாறாயினும் ரு.நி.ச.அ ஆனது விண்ணப்பத்தை நிராகரித்தது. பின்னர் ருசிதானியாவின் பொது பயன்பாட்டு ஆணைக்குழு ஆனது கே.பி சோலார் பவர் (பிரைவட்) லிமிட்டட்டிற்கு உரிமம் வழங்கக்கூடாது என பணிப்பாளர் நாயகத்திற்கு பணித்திருந்தமை கண்டறியப்பட்டது.

கே.பி. சோலார் பவர் (பிரைவட்) லிமிட்டட் ஆனது நீதிமன்று ஒன்றில் ரு.நி.ச.அ இனது தீர்மானத்தை கேள்விக்குட்படுத்த விரும்புகிறது.

**(i)** பொருத்தமான நிர்வாக சட்டக் கோட்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவற்றுடன் இவர்களுக்கு அறிவுறுத்துக.

**(09 புள்ளிகள்)**

**(ii)** உமது அறிவுரைக்கு எதிராக ரு.நி.ச.அ இனால் ஏதேனும் பிரதிவாதம் முன்வைக்க முடியும் என நீர் கருதுகிறீரா?

**(03 புள்ளிகள்)**

**(ஆ)** தற்றுணிபு ஆனது நிர்வாக அதிகார சபைகளிற்கு அவை புரிய விரும்புகின்ற காரணத்தால் மாத்திரம் அவை விரும்பியதை செய்வதற்கு அதிகாரம் அளிக்கவில்லை. தற்றுணிபை செயற்படுத்துதலில், இவை தாம் விரும்பியதை புரியாமல், தாம் புரிய வேண்டியதை செய்ய வேண்டும்.

மேலுள்ள கூற்றின் அடிப்படையில் நிர்வாக அதிகாரசபைகளாலான தற்றுணிபின் முறைகேடான பயன்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றங்கள் விருத்தி செய்துள்ள அடிப்படை காரணிகளை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

02. "இயற்கை நீதியின் கோட்பாடுகள் ஆனவை நிர்வாக நடவடிக்கைகளின் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதுடன், இவற்றினை கடைப்பிடித்தலானது குறித்த ஒரு காலத்தையும் பணத்தையும் தேவைப்படுத்துகிறது என்பது உண்மையாகும். ஆயின் …… இவை நியாயத்தை நிலைநிறுத்துவதற்கும், குறைகளை குறைப்பதற்கும் அத்தியாவசியமானவை ஆகும். எனவே இயற்கை நீதியின் கோட்பாடுகள் ஆனவை தடையாக இன்றி, திறனை மேம்படுத்துவதாக அமையலாம். நீதிமன்றம் இவை பிணக்குகளை ஏற்படுத்த இடமளிக்காது, நல் நிர்வாகம் தேவைப்படுத்தும் தராதரங்களிற்கு அமைய செயற்படுவதுடன், எதேனும் சந்தர்ப்பத்தில் இவை பிரஜைகளிற்கு மாத்திரமன்றி அலுவலர்களிற்கும் ஒரு பாதுகாப்பாக செயற்பட வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*Mc Nabb v. United States, 318 US 332 (1943)*

**அ.** இரு தரப்பினையும் விசாரித்தல் (*audi alteram partem*) விதியானது எந்தளவு தூரம் நீதியின் சீர்குலைவைத் தடுக்கிறது.

**(10 புள்ளிகள்)**

**ஆ.** நிர்வாக வழக்குத் தீர்ப்புகளில் பாராபட்சத்திற்கு எதிரான விதி எவ்வாறு இலங்கையின் நீதித்துறையால் நிலைநாட்டப்பட்டது என நுணுக்கமாக ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

-முழுப்பதிப்புரிமையுடையது-